DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No.115/2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 02nd day of January 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 4** | கிராமம் | : | தேவிப்பட்டிணம் |
| பெயர் | : | காளிதாஸ் | தாலுகா | : | இராமநாதபுரம் |
| த/ பெ. | : | மாரிமுத்து | சமயம் | : | இந்து |
| வயது | : | 32 | தொழில் | : | பெயிண்ட்டிங் வேலை |

நாள்: 02.01.2023
நேரம்: 02.30 . பி.ப.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

முதல் விசாரணை

நான் தற்போது தேவிப்பட்டிணத்தில் வசித்து பெயிண்ட்டிங் வேலை செய்து வருகிறேன். கடந்த 18.04.2021ம் தேதி 07.00 மணியப்போல காவல்நிலையம் சென்றிருந்தேன். அங்கு வைத்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். எதிரிகள் தாக்கியதாக எழுதியிருந்து. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு சாட்சி விசாரணையில் பிறழ் சாட்சியாக மாறியுள்ளதால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

அரசுதரப்பு கு.வி.

18.04.2021 அன்று போலீசார் அ.சா.1 முனிஸ்வரியின் வீட்டை பார்த்து மாதிரிவரைபடம் வரைந்து பார்வைமகஜர் தயார் செய்தார்கள் என்றும் அதில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். என்னுடன் முருகன் என்பவரும் கையெழுத்து செய்தார். நான் முதல்விசாரணையில் சொன்னது

காவல்நிலையம் சென்று நடந்த சம்பவம் குறித்து விசாரித்தார்கள் என்று தான் சொன்னேன் என்றால் சரிதான்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2023.01.02 16:56:07 +0530

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No. 115/2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 02nd day of January 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 3** | கிராமம் | : | செவ்வூர் |
| பெயர் | : | நாகபிரபு | தாலுகா | : | பரமக்குடி |
| த/ பெ. | : | முனியாண்டி | சமயம் | : | இந்து |
| வயது | : | 18 | தொழில் | : | தனியார் நிறுவனம் |

நாள்: 02.01.2023
நேரம்: 02.20 . பி.ப.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னையில் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். நான் ஐடிஐ வரை படித்துள்ளேன். அ.சா.1 எனது அம்மா. ஆஜர் எதிரிகளை தெரியும். 6.4.2021ம் தேதி இரவு 8 மணியைப்போல எங்கள் வீட்டு திண்ணையில் கோனேஸ்வரி என்பவர் உட்கார்ந்து அரசியல் பேசிக்கொண்டிருந்தார். அப்போது எனது அப்பா அ.சா.2 அரசியல் பற்றி எதுவும் பேசவேண்டாம் வீட்டிற்கு போங்கள் என்று சொன்னார். அப்போது வீட்டிற்கு போகாமல் உட்கார்ந்திருந்தார். வீட்டிற்கு போகவில்லையா என அதட்டி பேசினார். அப்போது 1ம் எதிரி சக்திவேல் என்பவர் அவர் வீட்டிலிருந்து வந்து எங்கள் வீட்டிற்கு வந்து எனது அப்பாவை தகாத வார்த்தையால் பேசினார். அப்போது என் அம்மா என்ன பெரிய மனுஷனை இப்படி பேசுகிறாய் என்று சத்தம் போட்டார். அப்போது 1ம் எதிரி சக்திவேல் அங்கு நின்ற எனது சைக்கிளை எனது அப்பா மேல் தள்ளிவிட்டார். அப்போது கோனேஸ்வரி, மற்ற எதிரிகள் எனது அப்பாவை தாக்கினார்கள்.

எனது அம்மா எனது அப்பாவை அடிக்கிறார்கள் என விலக்கிவிட ஓடிவந்தார். அப்போது நான் வீட்டிற்குள் இருந்து ஓடி வந்தேன். ஏன் அண்ணன் என் அப்பாவை அடிக்கிறீர்கள் என்று 1ம் எதிரியிடம் கேட்டேன் அப்போது 1ம் எதிரி என்னை வலது பக்க தோள்பட்டையில் தாக்கினார். அப்போது எனது

அம்மா எனது மகனை அடிக்கிறார் என்று ஓடி வந்தார். எனது அம்மா ஏற்கனவே வலது கண்ணில் ஆப்ரேஷன் செய்யப்பட்டிருந்தது. எனது அம்மாவை வலது கண்ணத்தில் 1ம் எதிரி கையால் ஓங்கி அடித்தார். எனது அம்மா பல்லெல்லாம் கட்டி மயங்கி விழுந்துவிட்டார். பக்கத்துவீட்டில் இருந்த பாக்கிஷ்வரியும், அஞ்சலையும் ஓடி வந்து விலக்கிவிட்டார்கள். பின்பு 108 ஆம்புலன்ஸிற்கு போன் செய்து என்னையும், அம்மா அப்பா ஆகிய மூன்று பேரும் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். நான் ஒரு நாள் சிகிச்சையில் இருந்தேன். சிகிச்சையிலிருந்தபோது போலீசார் விசாரித்தார்கள். புகார் எனது அப்பா அம்மாவும் கொடுத்தனர். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு கு.வி.</u>**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2023.01.02 16:56:19 +0530